இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 22-06-2023

# எது தேச அவமானம்?

அடுத்த குழப்பத்தை ஏற்படுத்த பா.ஜ.க. தயாராகி வருகிறது. இந்தியாவில் பொது சிவில் சட்டம் – என்பதுதான் அவர்கள் அடுத்து எடுக்கப் போகும் குழப்ப அஸ்திரமாக இருக்கப் போகிறது!

மக்களுக்கு நேரடியாக எந்த நன்மையையும் செய்து பெயர் வாங்கும் கட்சியாக பா.ஜ.க. எப்போதும் இருந்தது இல்லை. அவர்களுக்கு அந்த நினைப்பு இருந்ததும் இல்லை. இருந்திருந்தால் தேர்தலில் அளித்த எத்தனையோ வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றி இருப்பார்கள்.

**ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் இல்லை. உழவர்களுக்கு அவர்களது விலைபொருளின் விலையை இரண்டு மடங்கு ஆக்கவும் இல்லை. வெளிநாட்டில் பதுக்கி இருந்த கருப்புப் பணத்தை மீட்கவும் இல்லை. எவரது வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் போடவும் இல்லை. கள்ளப்பணத்தை ஒழிக்கவும் இல்லை. தீவிர வாதம் ஒழியவும் இல்லை. விலைவாசியை குறைக்கவுமில்லை. இந்தியாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இல்லை. அமெரிக்க பொருளாதாரத்துக்கு எதிராக உயர்த்தவும் இல்லை. வெளிநாட்டில் இருந்து இறக்குமதியை மொத்தமாக நிறுத்தி விடுவோம் என்றார்களே தவிர, அதுவும் நடக்கவில்லை. இப்படி மொத்தமும் வெறுங்கையில் முழம்போடுவதும், வாயால் வடை சுடுவதுமான காட்சிகளைத் தான் பார்க்கிறோம் ஒன்பது ஆண்டுகளாக!**

அடுத்த ஆண்டு ஓட்டுக் கேட்டு வர வேண்டியதாக இருக்கிறது. என்ன செய்யலாம்? இனிமேல் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்ய முடியாது. பணமும் இல்லை, குணமும் இல்லை. மனமும் இல்லை. அதனால் மக்களது மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு குழப்பத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தி அதன் மூலமாக அரசியல் லாப அறுவடை செய்யலாமா என்று பார்க்கிறது பா.ஜ.க. அயோத்தியில் ராமர் கோவிலை வருகிற சனவரி மாதம் திறக்கப் போகிறார்களாம். அடுத்து, பொது சிவில் சட்டத்தைக் கையில் எடுக்கப் போகிறார்கள். அதற்கான வேலையை சட்ட ஆணையம் மூலமாகத் தொடங்கி இருக்கிறார்கள்.

பொது சிவில் சட்டம் பற்றி பொதுமக்களிடமும் மத அமைப்புகளிடமும் கருத்துக் கேட்கப் போகிறதாம் சட்ட ஆணையம். நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி தலைமையிலான 22 ஆவது சட்ட ஆணையம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான 30 நாட்களுக்குள் பொதுமக்கள் தங்கள் கருத்துகளை சட்ட ஆணையத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. கருத்துகளை தெரிவிக்க விரும்புபவர்கள் அதன் உறுப்பினர் செயலரின் மின் அஞ்சல் முகவரிக்கோ அல்லது சட்ட ஆணையத்தின் இணைய தள இணைப்பிலோ தெரிவிக்கலாமாம். இது நாட்டில் புதிய விவாதத்தையும் சர்ச்சையை மட்டுமே கிளப்புமே தவிர, அமைதிக்கு வழிவகுக்காது. நாடு முழுவதும் பல்வேறு மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்காமல் கொந்தளிப்பை எதிர்கொண்டு வரும் பா.ஜ.க. அதில் இருந்து திசை திருப்புவதற்காக இந்த தந்திர உத்தியைக் கையில் எடுத்துள்ளது.

21 ஆவது சட்ட ஆணையமானது உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.எஸ். சவுகான் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் 2018 ஆம் ஆண்டு தனது அறிக்கையை வழங்கியது. 'நாட்டில் பொதுசிவில் சட்டம் தேவையுமில்லை, அது தற்போதைய சூழலுக்கு பொருத்தமானதும் அல்ல' என்று அந்த ஆணையம் கூறியிருந்தது.

- **பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது நாட்டில் நிலவும் பன்முகத் தன்மைக்கு முரணானது.**
- **மதச்சார்பின்மைக்கு எதிரானது.**
- **நாட்டின் பன்முகத் தன்மையை பொதுசிவில் சட்டம் மூலமாக சமப்படுத்த முடியாது.**
- **சமூகத்தின் பலவீனமான குழுக்கள் தங்களுக்குக் கிடைக்கும் சலுகைகளை இழக்கக் கூடாது.**
- **முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது என்பது அனைத்து வேறுபாடுகளையும் நீக்குவது அல்ல.**
- **வெவ்வேறு மொழிகள், இனங்கள், மதங்கள் இருப்பது என்பது பலமான ஜனநாயகப் பண்பையே காட்டுகிறது.**

–என்றெல்லாம் சொன்னது 21 ஆவது சட்ட ஆணையம். இவை அனைத்தையும் பட்டவர்த்தனமாக நிராகரித்த பா.ஜ.க. தான், 22 ஆவது சட்ட ஆணையத்தை அமைத்துள்ளது. பொதுசிவில் சட்டத்தைக் கொண்டு வருவது நோக்கமாக இருக்குமானால், அதற்கு எதற்காக பொதுமக்கள் கருத்துக் கேட்க வேண்டும்? இதனை விட கண்துடைப்பு இருக்க முடியுமா?

பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள் பல்வேறு சொத்து மட்டும் திருமணச் சட்டங்களைப் பின்பற்றுவது இந்த தேசத்துக்கு அவமானமாம். அதற்காக பொதுச் சட்டம் வேண்டுமாம்?

**விவாகரத்து, வாரிசு, பரம்பரை, தத்தெடுப்பு, பாதுகாவலர் ஆகிய விவகாரங்களில் வெவ்வேறு சட்டம் பயன்படுத்தப்படுவது அவமானம் என்றால்... தீண்டாமையால் ஒரு மனிதன் புறக்கணிக்கப்படுவது இந்த நாட்டின் அவமானம் அல்லவா? ஏழை என்பதால் ஒருவன் புறக்கணிப்படுவது தேசத்தின் அவமானம் அல்லவா? இன்னார் என்பதால் அந்த மனிதன் கோவில் அர்ச்சகராக ஆக முடியும், மற்றவர் ஆகமுடியாது என்பது அவமானம் இல்லையா? இன்ன ஜாதி என்பதற்காக ஒரு சில தொழில்களைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுவது இந்த தேசத்தின் அவமானம் இல்லையா? சனாதனத்தை ஒரு மாநிலத்தின் ஆளுநர் பகிரங்கமாக ஆதரித்து பேசுவதும்- பெண் என்பதால் ஒரு பழங்குடி குடியரசுத் தலைவர் புறக்கணிக்கப்படுவதும் தேசத்தின் அவமானம் இல்லையா?**

**ஜாதி இல்லை - அனைவரும் சமம் என்று ஏன் பொதுசமூகச் சட்டம் கொண்டுவர முடியவில்லை? 'தீண்டாமையை சட்டப்படி ஒழிப்பதால் பயனில்லை, ஜாதி பார்ப்பது குற்றம் - அதனை சட்டப்படி தடை செய்யுங்கள்' என்று தந்தை பெரியார் தானே சொன்னார். 'பொதுவானவர்கள்' எங்கே போனார்கள்? இது பற்றி பொதுவானவர்கள் கருத்துச் சொல்லி இருக்கிறார்களா? வேறுபாடு கற்பிக்கும் இவைதான் தேச அவமானங்கள்.**

திருமணம், சொத்து ஆகியவற்றில் மதங்களுக்குள் இருப்பவை மாறுபட்ட பழக்க வழக்கங்கள். யாரையும் தாழ்த்தவும் இல்லை, உயர்த்தவும் இல்லை. உண்மையான தேச அவமானம் துடைக்க முயற்சிக்காமல் தேசத்தில் குழப்பம் ஏற்படுத்தத் துடிக்கவே பொதுசிவில் சட்டம் என்பதைக் கையில் எடுக்கிறார்கள்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி திருச்சி தெற்கு மாவட்டக் கழக மாணவரணியினர் கலைஞர் நூற்றாண்டு சுடர் ஏந்தி 17.6.2023 அன்று திருச்சி அண்ணா சிலையிலிருந்து தொடர் ஓட்டத்தை தொடங்கி நேற்று முன்தினம் (20.06.2023) திருவாரூர் கலைஞர் கோட்டத்தை வந்தடைந்ததை தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கலைஞர் நூற்றாண்டு சுடரை வழங்கி வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, கழக மாணவரணிச் செயலாளர் எழிலரசன், இணைச் செயலாளர் மோகன், துணைச் செயலாளர் மன்னை சோழராஜன், திருச்சி மாநகர கழகச் செயலாளர் மதிவாணன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கோடிக் கணக்கான மக்களின் உள்ளங்களில் கலைஞர் என்றென்றும் வாழ்வார்!

# கலைஞரின் தொண்டு - பொது வாழ்வில் ஈடுபடுவோர்க்கு உந்து சக்தியாக வழிகாட்டும்!

## திருவாரூர் கலைஞர் கோட்டத் திறப்பு விழாவிற்கு - பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வாழ்த்துச் செய்தி!

திருவாரூர், ஜூன் 22–

திருவாரூரில், கலைஞர் கோட்டத் திறப்பு விழாவிற்கு பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியில், "கலைஞரின் பணிகளும் தொண்டும் பொது வாழ்வில் மிகுந்த அக்கறையுடன் ஈடுபடுவோர்க்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு உந்து சக்தியாக வழிகாட்டும்!" என்று குறிப்பிட்டிருந்தார்.



திருவாரூர் காட்டூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில், உடல் நலக்குறைவு காரணத்தால் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் கலந்து கொள்ளவில்லை. இதையடுத்து விழாவில், பீகார் முதல்வர் நிதிஷ்குமாரின் ஆங்கில வாழ்த்துரையை மாநிலங் களவை கழக குழுத் தலைவர் திருச்சி சிவா, தமிழில் மொழி பெயர்த்து வழங்கினார்.

அவ்வுரை வருமாறு:

கலைஞருக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியையும், அஞ்சலியையும் நான் செலுத்துகிறேன். இந்நிகழ்ச்சியில் நான் பங்கேற்கும் அரிய வாய்ப்பைப் பெற்றிருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் டி.ஆர்.பாலு இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்க பாட்னாவிற்கு வந்தார். அண்மையில் ராஜா இவ்விழாவிற்கான அழைப்பிதழைக் கொடுப்பதற்காக பாட்னா வந்திருந்தார். கலைஞரின் 100வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்காக உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயத்தின் அடிதளத்தில் இருந்து நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். கலைஞர் அவர்கள் தன்னுடைய 14வது வயதில் பொது வாழ்வில் அடியெடுத்து வைத்து அதற்குப் பின் 80 ஆண்டுகள் தீவிர, முழுநேர அரசியல் பணியில் ஈடுபட்டிருந்தார். அதற்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 50 ஆண்டுகள் இருந்திருக்கிறார். இது இந்த நாட்டில் எந்த தேசியக் கட்சி தலைவருக்கும், மாநிலக் கட்சித் தலைவருக்கும் கிடைக்காத ஒரு மிகப்பெரிய பேறு.

கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகவும், சமத்துவதற்காகவும் அரும்பாடுபட்டவர், ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த மக்களுக்காகவும். பெண்கள் பொருளாதாரத்தில் ஏற்றம் பெற வேண்டும் என்பதற்காகவும், பாடுபட்டவர். ஏழைகளுக்காக உழைத்ததே அவருடைய புகழுக்குக் காரணம்.

### சமூக நீதிக்கு பாடுபட்ட கலைஞர்!

அவர் மாற்றம் ஏற்படுத்திய கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் அவர் என்றென்றும் நிச்சயம் வாழ்ந்து கொண்டிருப்பார். சுயமரியாதை இயக்கத்தின் தலைவர் என்ற அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, பெண்களுக்கு குடும்பச் சொத்தில் உரிமை உண்டு என்ற சரித்திரப் புகழ் மிக்க சட்டத்தை இயற்றினார். அதோடு உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கி பெண்கள் பொருளாதாரத்தில் தற்சார்பு பெறும் வகையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி வரலாறு படைத்தார்.

தன்னுடைய இளம் வயதில் திரைத்துறையில் வசனகர்த்தாவாக இருந்த கலைஞர் அவர்கள் தமிழ்க் கலாச்சாரத்திற்கு ஆற்றிய பங்கு அளவிட முடியாதது. அவர் எழுதிய கதைகளும், வசனங்களும், திராவிட இயக்கத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தன. சமுதாய வளர்ச்சிக்காக அவர் முன்மொழிந்த கொள்கைகளும், அவர் ஆற்றிய பணிகளும், தொண்டும் என்றென்றும் அரசியல் தலைவர்களுக்கும், பொதுவாழ்வில் மிகுந்த அக்கறையோடு ஈடுபடும் யாவருக்கும் ஒரு உந்து சக்தியாக வழிகாட்டும்.

### கலைஞர் மீது மிகப் பெரிய மரியாதை!

நான் அவரை கடைசியாகச் சந்தித்தது 2017ஆம் ஆண்டு அவருடைய பிறந்த நாள் விழாவில்தான். தலைவர் கலைஞர் அவர்கள் மீது எங்களுக்கு மிகப்பெரிய மரியாதை எங்களுக்கு உண்டு, 1991 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், நான் ஜனதாதளத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன். எப்போதெல்லாம் தி.மு.க.விற்கு எதிராகக் குற்றச்சாட்டை முன்வைக்கும் போதெல்லாம் அதனை எதிர்த்து குரல் கொடுக்கும் உறுப்பினராக நான் செயல்பட்டிருக்கிறேன். 2017ஆம் ஆண்டில் அவருடைய பிறந்தநாள் விழாவிற்கு வந்தபோது, தி.மு.க. சட்டமன்ற தேர்தல் வெற்றி வாய்ப்பை இழந்திருந்த நேரம், திமுக அடுத்த தேர்தலில் வெற்றி பெறும், மு.க.ஸ்டாலின் முதல்வராக வெற்றி பெறுவார் என்று பேசினேன். 2018ல் கலைஞர் அவர்கள் மறைந்த போது அஞ்சலி செலுத்த வந்தபோது, மு.க.ஸ்டாலின் தான் அடுத்த முதல்வராக வரவேண்டும் என்று உறுதிபடத் தெரிவித்துவிட்டுச் சென்றேன். எனது விருப்பம் நிறைவேறி நீங்கள் முதல்வராக பொறுப்பேற்று மாநிலத்திற்கு மிகப் பெரிய தொண்டாற்றி வருகிறீர்கள்.

சில நாட்களுக்கு முன் தமிழகத்தில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தாக்குதலுக்கு ஆளாவதாக பரவலாக தகவல் வெளியானது. அதற்கு ஆதாரமாக இணையதளத்திலும், சமூக வலைதளங்களிலும் ஒரு வீடியோ வலம் வந்தது. இதுதொடர்பாக சிலர் என்னை வந்து சந்தித்தார்கள். நான் தமிழ்நாட்டின் முதலமைச்சரை ஸ்டாலின் அவர்களை தொடர்பு கொண்டு பேசினேன். உடனடியாக முதல்வர் தீவிரமாக விசாரித்து இது தவறான தகவல் என்றும், வெறும் வதந்தி என்றும் தெளிவுப்படுத்தினார். பீகாரில் இருந்தும் ஒரு அதிகாரிகள் குழு தமிழகத்திற்கு வந்து ஆய்வு நடத்தி ''பீகார் மாநிலத் தொழிலாளர்கள் யாரும் தமிழகத்தில் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை'' என்று உறுதிப்படுத்தினர். அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் எப்போதும் வழங்கப்படும் என்று தமிழக அரசு உறுதியளித்தது. பீகார் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் நலமுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நாங்கள் அறிகிறோம். குறிப்பாக பீகார் மக்கள் தமிழகத்தில் அன்புடன், நேசத்துடன் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

### பா.ஜ.க. அகற்றப்படும்!

இந்த விழாவில் பங்கேற்றதற்கு நான் மிகுந்த பெருமை கொள்கிறேன். ஜூன் 23 ஆம் தேதி பீகார் தலைநகர் பாட்னாவில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளும் ஒரு முக்கியமான கூட்டம் நடைபெற உள்ளது. அதில் உங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றுச் சிறப்பிக்க இருக்கிறார். எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த ஒற்றுமை நாங்கள் எண்ணுவதுபோல் ஈடேறினால், எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்தால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அகற்றப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, 2017ல் கலைஞரின் பிறந்தநாளுக்கு என்னை அழைக்க வந்த கனிமொழி, ராஜா ஆகியோர் அனைவருக்கும், தயாளு அம்மாள் அறக்கட்டளையில் உள்ள அனைவருக்கும், என்னை அழைத்தவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் வலிமை பெறும், உறுதி பெறும், கலைஞரின் கொள்கையை தொடந்து கொண்டு சேர்க்கும் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

## அமலாக்கத்துறைக்கு மனித உரிமை ஆணையம் நோட்டீஸ்!

*சென்னை, ஜூன் 22-*

*அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டது தொடர்பாக அமலாக்கத்துறைக்கு மாநில மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.*

*அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை நடத்திய அமலாக்கத்துறையினர் அவரை கைது செய்தனர். அப்போது நெஞ்சு வலி ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.*

*செந்தில் பாலாஜியை கைது செய்த போது மனித உரிமைகள் மீறப்பட்டதாக அவரது மனைவி மேகலா, மாநில மனித உரிமை ஆணையத்திடம் புகார் அளித்துள்ளார். மேலும், செந்தில் பாலாஜியை நேரில் சந்தித்த மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர் கண்ணதாசனிடம் கைது செய்யப்பட்டபோது தான் தாக்கப்பட்டதாக செந்தில் பாலாஜி கூறியிருந்தார்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, விழுப்புரம் கோட்டத்தில் விழுப்புரம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மண்டலங்களில் அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற, இறந்த பணியாளர்களின் வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை உள்ளிட்ட பணப்பலன்களுக்குரிய காசோலைகளை வழங்கும் விழா உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வழங்கினார்கள்.